1973 நவம்பர் 23]

சிறு பாலங்களை அகலமாக்குதல்

* 337 வினு—**திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலைகளில் அமைக்கப்படும் கல்வெர்ட்டுக்களைப் போல் இதர சிறு பாலங்களும் (Minor bridges) 12 மீட்டர் அகலத்திற்கு அமைக்கப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : நாடெல்லாம் தேசிய நெடுஞ்சாலைகள் அகலப்படுத்துகிற செயல் பல்வேறு இடங்களில் நடைபெறும் போது கல்வெர்ட்களை 12 மீட்டர் அகலத்திற்கு அமைப்பதுபோல் சிறு பாலங்களையும் 12 மீட்டர் அகலத்திற்கு அமைப்பதுபற்றி மறுபரிசிலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தேசிய நெடுஞ்சாலைகளுக்கு வைக்கப்படுகிற அந்த முறையை மாநில பாதைகளுக்கும் வைக்க வேண்டிய அவசியமில்லை. இப்போதுள்ள 24 அடி அகலமே போதும் என்று அரசு கருதுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தத் தேசிய நெடுஞ்சாலைகளில் பல பாலங்களைப் புதுப்பிப்பதற்காக மாதக்கணக்கில் டைவர்ஷனில் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்யப்படுமா? திருமங்கலத்திற்கு அருகாமையில் ஒரு இடத்தில் இப்படிப்பட்ட டைவர்ஷன் நான்கு மாத காலமாக இருக்கிறது. நெடுங்காலமாகக் கேட்கப்பட்டும் கூட ஒரு சிறு பாலம் அகலப்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, மெயின்டெனன்ஸ் நம் கையில் இருப்பதால் இவற்றில் கவனம் செலுத்தி ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு பாலத்தைத் திறக்கும் போது எப்போது வேலை தொடங்கப்படுகிறது, எப்போது முடிக்கப் போகிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் அடங்கிய பலகை போடப் படுகிறது. அதையும் மீறி வேலைகள் நடைப்பட்டிருந்தால் அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதிதாக ஒரு பாலம் கட்டவேண்டுமென்றால் பாலத்திற்கு ஒரு செய

செயலாளர் இடத்தில் இருந்து, மத்திய அரசிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அப்ரோச் ரோடுக்கு இன்னொரு செயலாளரிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. பாலத்திற்கு அனுமதி வருகிறது, ஆனால் அணுகுசாலைக்கு அனுமதி வடமாட்டேன் என்கிறது. இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் இருக்கின்றன. வர இருக்கிற தேசிய நெடுஞ்சாலை மாநாட்டில் இதுபற்றி நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : அமைச்சர் அவர்கள் சிறு பாலங்களை நெடுஞ்சாலைகளில் அமைப்பதுபோல் அமைக்க உத்தேசமில்லை என்று சொன்னார்கள். இருந்த போதிலும் தஞ்சை மாவட்டத்தில் கல்லணை போன்று ஆற்றுப் பாலங்கள் நெடுஞ்சாலையோடு இணைப்பில்லாமல் இடை இடையே அந்த ஆற்றுப் பாலங்கள் கட்டப்பட்டு அவை விரிவாக்கப்படாமல் இருப்பதால் வடிகால், வாய்க்கால் பகுதிகளிலுள்ள பாலங்களையாவது 12 மீட்டர் அகலத்திற்கு உள்ள பாலங்களாக அமைத்துத் தரும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நெடுஞ்சாலைகளில் என்றால் 12 மீட்டர் அகலத்தில் வைக்க வேண்டுமென்று இருக்கிறது. மாநில அரசுக்குச் சொந்தமான பாலங்களுக்கு அது தேவை இல்லை என்று கருதி 24 அடி அகலமுள்ள கல்வெர்ட்ஸ் போதும் என்று கருதப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தேசிய நெடுஞ்சாலைகளில் பல பாலங்களை உடைத்தெடுத்துவிட்டு ஒப்பந்தக்காரர்கள் அவர்களுடைய காலக்கெடு நீங்கியபோதும் அவர்கள் அவற்றைப் பூர்த்தியாக்காமல் போட்டிருக்கிறார்கள். ஆகவே காலக்கெடு நீங்கிய பாலங்களையாவது கட்டி முடிக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப .உ. சண்முகம் : அந்த விவரம் என்னிடம் இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் எழுதியனுப்பினால் பழைய காண்ட்ராக்டை ரத்து செய்துவிட்டு புது ஒப்பந்தக்காரரிடம் வேலை செய்யுமாறு ஆணை பிறப்பிக்கப்படும்.